இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 12-07-2024

# எத்தனை நாக்குகள்?

நீட் தேர்வில் நடந்த முறைகேடுகளில் யார் சொல்வதை நம்புவது என்ற குழப்பம் பொதுமக்களுக்கு வந்திருக்கிறது. பிரதமர் சொல்வதையா? ஒன்றிய கல்வி அமைச்சக இயக்குநர் சொல்வதையா? யார் சொல்வதை நம்புவது?

நீட் தேர்வில் முறைகேடு நடந்திருக்கிறது என்பதை உச்சநீதிமன்றமே ஒப்புக் கொண்டு விட்டது. "நீட் தேர்வின் புனிதத்தன்மை தொலைந்து விட்டது" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லிவிட்டார்கள். உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு வெளிப்படையாகவே இதனைச் சொல்லி விட்டது.

**"நீட் தேர்வில் வினாத்தாள் கசிந்துள்ளது தெளிவாகத் தெரிகிறது. தேர்வில் நடந்த முறைகேடுகள் அமைப்பு ரீதியாக நடைபெற்றதா, முறைகேடுகளால் தேர்வு நடைமுறையின் நேர்மை பாதிக்கப்பட்டதா, நேர்மையாக தேர்வு எழுதிய தேர்வர்களிடமிருந்து முறைகேடுகள் மூலம் பலனடைந்த தேர்வர்களைத் தனியாகப் பிரிக்க முடியுமா என்பதைக் குறித்து ஆராய வேண்டும். தேர்வு நடைமுறையை முறைகேடுகள் பாதித்திருந்தால் மறுதேர்வு நடத்த வேண்டியது அவசியம் ஆகும். நீட் தேர்வின் புனிதத் தன்மை தொலைந்து, பொதுவெளியில் கசிந்த அந்தத் தேர்வின் வினாத்தாள் சமூக ஊடகத்தில் பரப்பப்பட்டிருந்தால் மறுதேர்வு நடத்த உத்தரவிட்டாக வேண்டும். முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் யார் என்பதைக் கண்டறிய முடியாவிட்டால் மறுதேர்வு நடத்த கட்டளையிட்டாக வேண்டும்"**

- என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். முறைகேடு நடந்திருக்கிறது என்பதைத் தெளிவு படுத்திவிட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பிரதமர் மோடியும், நீட் தேர்வில் முறைகேடு நடந்திருப்பதை தனது உரையில் ஒப்புக் கொண்டார். கடந்த ஜூலை 1 ஆம் தேதி மக்களவையில் பேசிய பிரதமர் மோடி, "வினாத்தாள் கசிவு சம்பவங்களை மத்திய அரசு தீவிரமாக கவனத்தில் கொண்டுள்ளது என்பதை மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த விவகாரத்தில் போர்க்கால அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இளைஞர்களின் எதிர்காலத்துடன் விளையாடுபவர்கள் தப்ப முடியாது. தேர்வுகளின் ஒட்டுமொத்த நடைமுறையையும் வலுப்படுத்த முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டார்.

போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்ததாகவும், இளைஞர்களின் எதிர்காலத்துடன் விளையாடுபவர்கள் தப்ப முடியாது என்றும் பிரதமர் சொல்லி இருப்பது, முறைகேடு நடந்துள்ளதை ஒப்புக் கொண்ட தன்மையே ஆகும்.

ஆனால் இவை அனைத்தையும் ஒன்றிய அரசு மறுக்கிறது. அதாவது பிரதமர் சொல்வதையே மறுக்கிறது ஒன்றிய அரசு. உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசின் கல்வி அமைச்சக இயக்குநர் சார்பில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. "இந்தத் தேர்வில் நம்பகத்தன்மை மிகப்பெரிய அளவில் மீறப்பட்டதற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை. அவ்வாறு ஆதாரங்கள் இல்லாத நிலையில், ஏற்கனவே முடிவுகள் அறிவிக்கப்பட்ட தேர்வை முழுமையாக ரத்து செய்வது பகுத்தறிவாகாது. நீட் தேர்வு தொடர்பாக ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட உண்மையான குற்றச்சாட்டுகளை மட்டுமே நீதிமன்றம் எடுத்துக் கொள்ள வேண்டும். அனுமானங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது" என்று அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

**பிரதமர் சொல்வது உண்மையா? ஒன்றிய கல்வி அமைச்சக இயக்குநர் சொல்வது உண்மையா?**

தேசிய தேர்வு முகமை ஒரு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. "மே 5 ஆம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வு எந்தவித சட்ட விரோத நடவடிக்கைக்கும் இடமளிக்காமல் நேர்மையாக நடத்தப்பட்டது. இத்தேர்வில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளதாகத் தெரிவிக்கப் படும் புகாருக்கு ஆதாரமில்லை" என்று சொல்லப்பட்டுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஜூன் 13 ஆம் தேதி என்ன சொன்னார் தெரியுமா? "நீட் தேர்வில் எந்த முறைகேடும் நடந்ததாக ஆதாரங்கள் கிடைக்கவில்லை" என்றார். ஜூன் 16 ஆம் தேதி, "சில முறைகேடுகள் நடந்துள்ளது, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும்" என்று சொன்னார். மூன்று நாளில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார். ஆனால் அவரது கட்டுப்பாட்டில் இருக்கும் கல்வி அமைச்சக இயக்குநர், எந்த முறைகேடும் நடக்கவில்லை என்று உச்சநீதிமன்றத்தில் மனு போடுகிறார். யார் சொல்வது உண்மை?

ஆனால் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் சி.பி.ஐ., நீட் தேர்வு வினாத்தாள் கசிவு குறித்து ஆறு வழக்குகளைப் பதிவு செய்து இதுவரை 11 பேரைக் கைது செய்துள்ளது. பீகார், ராஜஸ்தான், டெல்லி, உத்தரப்பிரதேச மாநிலக் காவல் துறை சார்பில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை எதற்காக கைது செய்ய வேண்டும்? இந்த வழக்குகள் அனைத்தும் பொய் வழக்குகளா? உத்தரப்பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் பா.ஜ.க. ஆட்சிதான் நடக்கிறது. பீகாரில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கிறது. பா.ஜ.க. அரசு எதற்காக இந்தக் கைது நடவடிக்கைகளை எடுக்கிறது? சி.பி.ஐ. தவறான பாதையில் செல்கிறதா?

ஒரே தேர்வில் ஒரே ஒன்றிய அரசுக்குத்தான் எத்தனை நாக்குகள்?

●●

# நகராட்சி நிர்வாகத்துறையில் அடுக்கடுக்கான திட்டங்கள்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

மேலும், அரசாணை (நிலை) எண்.305, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.21.06.2023ன் படி தாம்பரம், ஆவடி மற்றும் கடலூர் மாநகராட்சி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம் கூடுவாஞ்சேரி, பூந்தமல்லி, பொன்னேரி மற்றும் திருவேற்காடு நகராட்சிகளில் 69.56 கி.மீ நீளத்திற்கு ரூ.145.24 கோடி மதிப்பீட்டில் 53 மழைநீர் வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட சங்கரப்பேரி, பண்டாரம்பட்டி, மீளவிட்டான், தூத்துக்குடி புறநகர் மற்றும் முத்தையாபுரம் போன்ற பகுதிகள் வடகிழக்கு பருவ மழையின்போது ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் மழைநீர் சூழ்ந்து பாதிப்புக்குள்ளாகியது.

மேற்படி சூழ்நிலை இனி வருங்காலங்களில் ஏற்படாமல் தடுக்கும் வண்ணம், மழைநீர் வடிகால் அமைத்து மழை வெள்ளத்தினைத் தவிர்க்கும் வண்ணம் திட்ட வரைவு தயார் செய்யப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியானது நான்கு தொகுதியாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் முதல்கட்டப் பணியானது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.230.90 கோடி மதிப்பீட்டில் 25.386 கி.மீ நீளத்திற்கும், இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட பணிகள் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.122.86 கோடி மதிப்பீட்டில் 56.359 கி.மீ நீளத்திற்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022- 2023ம் திட்டத்தின் கீழ் ரூ.42.55 கோடி மதிப்பீட்டில் 43.094 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்ப ட்டுள்ளன.

இது தவிர, ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி தொகுதி 4ல் முதற்கட்டமாக நான்கு சிப்பங்களாக ரூ.82.98 கோடி மதிப்பீட்டில் 36.367 கி.மீ நீளத்திற்கும், மாநில பேரிடர் தடுப்பு நிதி 2023-24ன் கீழ் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் 3.700 கி.மீ நீளத்திற்கும் மழைநீர் வடிகால் அமைக்க பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**நகர்ப்புற நலிந்தோர் நலன்!**

நகர்ப்புறத்தில் வாழும் தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரக் கூறுகள் மற்றும் நகர்ப்புறத்தின் வீடற்றோருக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய 142 தங்கும் விடுதிகள்

**மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட முக்கிய திட்டங்கள்:**

3 ஆண்டுகளில் ரூ.8,672 கோடி மதிப்பீட்டில் 13,387 கி.மீ. நீள சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1,261 கி.மீ. சாலைப் பணிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு 2513 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.12.72 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகின்றன.

கொசஸ்தலை ஆறு மற்றும் சென்னையைச் சுற்றி நடைபெறும் பணிகள் உட்பட ரூ.6,778 கோடி மதிப்பீட்டில் 2,641 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டும், மேலும், 669 கி.மீ. நீளப் பணிகள் நடைபெறுகின்றன.

8,911 கோடி மதிப்பீட்டில் 28 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

858 கோடி மதிப்பீட்டில் 7.42 இலட்சம் தெரு விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணிகள் நடைபெறுகின்றன.

1,200 கோடி மதிப்பீட்டில் 55 பேருந்து நிலையப் பணிகள் முடிவுற்றுள்ள நிலையில் 100 பேருந்து நிலையப் பணிகள் நடைபெறுகின்றன.

690 கோடி மதிப்பீட்டில் 62 சந்தைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

86 இடங்களில் சந்தைகள் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

100 அறிவுசார் மையங்கள் நகராட்சி மாநகராட்சியால் தொடங்கப் பட்டுள்ளன.

ரூ.198 கோடி மதிப்பீட்டில் 79 அறிவுசார் மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும், 21 அறிவுசார் மையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

ரூ.424 கோடி மதிப்பீட்டில் 681 பூங்கா அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் 396 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.700 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு, கரைகளைப் பலப்படுத்திச் சீரமைக்கப்பட்டுள்ளன.

ரூ.373 கோடி மதிப்பீட்டில் புதிய மின் மயானங்கள் நிறுவும் பணிகளும் நவீனப்படுத்தும் பணிகளும் நடைபெறுகின்றன.

ரூ.153 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ரூ.771 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ரூ.316 கோடி மதிப்பீட்டில் பயோமைனிங் மூலம் தேக்கத் திடக்கழிவுகளை அகற்றி, நிலத்தினை ஞமீட்டெடுக்கும் பணி பல்வேறு நகரங்களில் முடிவுறும் நிலையில் உள்ளன. அவற்றின் மூலம் ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு நிழல்தரும் மரங்கள் நடப்பட உள்ளன.

திறந்த வெளியில் மலம் கழித்தலை அகற்றிட ரூ.152 கோடி மதிப்பீட்டில் 72,214 தனி நபர் கழிவறைகளும் 2,081 சமுதாயக் கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

ரூ.500 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

**புதிய நியமனங்கள்!**

கடந்த மூன்றாண்டு காலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 'சி' மற்றும் 'டி' பிரிவுகளில் உள்ள பணியிடங்களான இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், பணி ஆய்வர், பதிவறை எழுத்தர், செயல்திறனற்ற உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆக மொத்தம் 1405 பேருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகளை உருவாக்கிட உள்ளாட்சி அமைப்புகளில் பணியாளர் பற்றாக் குறையைப் போக்கிட 2,500 பேரைத் தேர்வு செய்து நியமனம் செய்யலாம் என உத்தரவிட்டார்கள்.

அதன்படி, 2,500 பேரை அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தேர்வு வைத்து யார் அதிக மதிப்பெண் பெறுகிறார்களோ, அவர்களைப் பணிக்கு எடுத்துக் கொள்ளலாம் என உத்தரவிட்டு; அதன்படித் தேர்வுகள் நடைபெற்றுள்ளன. தேர்வுத் தாள்களை மதிப்பிடும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் 2,500 பேருடன் மேலும் 3,000 பேரும் தேர்வு செய்யப்பட்டு நகராட்சிகளில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

**விருதுகளால் பாராட்டப்படும் தமிழ்நாடு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகரங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்கு முன்னுரிமை யளித்து வருகிறார்கள்.

இதன் காரணமாக, தூய்மை கணக்கெடுப்பு மாநில தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு 22வது இடத்தில் இருந்து தற்போது 2023ஆம் ஆண்டிற்கான தரவரிசை பட்டியலில் 10வது இடத்திற்கு உயர்ந்துள்ளது. மேலும் ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் தரவரிசையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளது. ஒரு லட்சத்திற்கு குறைவான நகரங்களின் தரவரிசை பட்டியலில் மாநில அளவில் மறைமலைநகர் நகராட்சி முதலிடம் பெற்றுள்ளது. தெற்கு மண்டலத்தை சார்ந்த மாநிலங்களில் உள்ள நகரங்களில் 15,000க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் தரவரிசை பட்டியலில் கீழ்வேலூர் பேரூராட்சி முதலிடம் பிடித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், புதுமையான திட்டங்களினால் பல்வேறு பெருமைகளைப் பெற்று நகராட்சி நிர்வாகத்துறையின் பணிகளால் நகரமயமாக்கலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது எனின் அதுமிகையல்ல!

### புதிய தண்டனைச் சட்டத்தின் கீழ் - மருத்துவ சிகிச்சையில் ஏற்படும் தவறுகளுக்காக

# மருத்துவர்களை சிறையில் அடைக்கும் தண்டனைப் பிரிவுகளை நீக்குக!

## ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

*புதுடெல்லி, ஜூலை 11-*

*புதிய தண்டனைச் சட்டத்தின் கீழ் மருத்துவர்களை, மருத்துவ சிகிச்சையில் ஏற்படும் தவறுகளுக்காக சிறையில் அடைக்கும் தண்டனைப் பிரிவுகளை நீக்குக எனக்கோரி, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம் எழுதியுள்ளார்.*

*அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:*

*ஒன்றிய அரசு பாரதீய நயாய சங்ஹிதா என்று புதிய தண்டனைச் சட்டத்தை (இந்தியன் பீனல் கோடுக்கு பதிலாக) 1.07.2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.*

*இந்தப் புதிய சட்டத்தின் 106வது பிரிவின்படி எவரேனும் கவனக்குறைவாக அல்லது அவசரமாகவே செய்யும் செயல், ஒருவது உயிரிழப்பிற்குக் காரணமானால் அவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனை, மற்றும் அபராதமும் வழங்கப்படும் எனவும், இதுபோன்ற கவனக்குறைவான முறையில் மருத்துவ சிகிச்சை வழங்கும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் செயலால், நோயாளிகளுக்கு உயிரிழப்பு ஏற்பட்டால், அம் மருத்துவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டின் தேசிய மருத்துவக் கமிஷன் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள மருத்துவர்களுக்கு இச்சட்டத்தின்படி சிறைத்தண்டனை வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*ஏற்கனவே வழக்கத்தில் இருந்த இந்திய தண்டனைச் சட்டத்தின் (இந்தியன் பீனல் கோடு) பிரிவு 304.A வின் படி மருத்துவர்களுக்கு 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் மூலம் மருத்துவர்கள், சிகிச்சையின் போது செய்யும் கவனக்குறைவான செயல்களுக்கு அதே தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது இது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.*

*மேலும் இந்நிலையில் பாராளுமன்றத்தில் நீங்கள் பேசும்போது, மருத்துவர் சிகிச்சை வழங்கும் போது ஏற்படும் மரணம் என்பது கொலை என்று சொல்ல முடியாது என்று கூறியதை உங்களுக்கு நினைவுறுத்துகின்றேன், அப்போது நீங்கள் வழங்கிய உறுதிக்கு மாறாக கூறப்பட்டுள்ளது நியாயமாகுமா?*



*உலகெங்கும் ஜூலை 1ஆம் நாள் மருத்துவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள பா.ஜ.க அரசு இந்த சட்டத்தை இந்த ஆண்டு ஜூலை 1ஆம் நாளிலிருந்து அமல்படுத்தி மருத்துவர்களுக்கு இப்போது பிரச்சினையை வழங்குகின்றதா?*

*சமீபத்தில் கோவிட் பெருந்தொற்று ஏற்பட்ட போது தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கிய போது, எத்தனை மருத்துவர்கள் தங்கள் இன்னுயிரை இழந்தனர் என்பதை உங்கள் அரசு மறந்து விட்டதா, அல்லது அந்த மருத்துவர்களுக்கு அவர்கள் வழங்கும் சிகிச்சையின் போது எதிர்பாராத விதமாக சில நிகழ்வுகள் ஏற்படும் போது அதற்கு அவர்களைப் பொறுப்பாக்கி இத்தண்டனைச் சட்டத்தின் மூலம் "மோடி சர்க்காரின் பரிசு" என்று கூறி, சிறை தண்டனை வழங்குவதுதான் உங்கள் நோக்கமா? என்று அறிய விரும்புகிறேன்.*

*இந்திய மருத்துவர்களின் சங்கம் சுமார் 4 லட்சம் உறுப்பினர்களை கொண்டது ஏற்கனவே இந்தச் சட்டத்திற்குத் தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கும் மருத்துவரின் தலைக்கு மேல் தூங்கிக் கொண்டிருக்கும் அரிவாளாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.*

*வடசென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக உள்ள நான் மருத்துவத்தை தொழிலாக கொண்டவன், என்கிற நிலையில் இந்த தண்டனைச் சட்டத்தின் பிரிவிற்கு எனது கடும் எதிர்ப்பினைதெரிவித்துக்கொள்கிறேன். இந்த தண்டனைச் சட்டப்பிரிவு மருத்துவச் சேவை வழங்குவதில் உள்ள இடர்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் மருத்துவம் என்னும் தொழிலின் மருத்துவம் அறியாமல், நோயாளிகளுக்காக ஓய்வின்றி தன்னை அறியாமல் நோயாளிகளுக்காக தொண்டாற்றும் மருத்துவர்களின் அருஞ்செயல்களைப் புரிந்து கொள்ளாமல் உருவாக்கப் பட்டுள்ளது.*

*மருத்துவ சேவை வழங்கும்போது அறியாமல் ஏற்படும் தவறுகள் குற்றச் செயல்கள் என்று சொல்லுவது தவறாகும் என்பதை புரிந்து கொண்டு இந்தச் சட்டப் பிரிவை திருப்பி சரி செய்திடுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி கூறியுள்ளார்.*



நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அருண் நேரு புத்தணாம்பட்டியில் வாக்களித்த பொதுமக்களுக்கும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியின் போது வடக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தர்மன் ராஜேந்திரன் டோல்கேட் சுப்ரமணி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை காட்டுக்குளம் கணேசன், வீரபத்திரன் சரவணன், வசந்தகுமார், சேர்மன் ஸ்ரீதர், தொ.மு.ச. குணசேகர், கருணாமூர்த்தி ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.